**ARTICLE 46 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00072**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 118–128
Received: 2 October 2026 • Accepted: 3 October 2026

# பண்பாட்டுப் பார்வையில் சிவகாசி பத்திரகாளியம்மன் கோயில்

**பொற்கொடி க[1,*], பத்மபிரியா மா[2]**
[1]முனைவர் பட்ட பகுதி நேர ஆய்வாளர்,தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி., India
[2]தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** பொற்கொடி க — tamilseminar12@gmail.com

## Abstract
Culture is like a mirror that illuminates and reflects the passage of time. The culture of a people is transmitted from one generation to another and serves as a representation of human civilization. In particular, the culture of folk communities is worthy of systematic study and documentation. Deities, which are closely associated with the spiritual beliefs of people, form an integral part of their worship and religious practices. The Badrakali Amman Temple, located in Sivakasi in Virudhunagar District, is one of the prominent temples in the region. As a deity worshipped by various folk communities, the temple reflects significant cultural traditions in its architectural structure, modes of worship, festivals, and related practices. Mother Goddess worship has been one of the most important forms of worship in Tamil Nadu. This temple, which serves both as a foundation of Mother Goddess worship and as a marker of the identity of various ethnic and social groups, embodies several cultural traditions and remnants of folk practices. This article examines the cultural aspects of the Badrakali Amman Temple and its significance in preserving the traditions and identity of the communities associated with its worship.

## ஆய்வுச் சுருக்கம்
பண்பாடு என்பது காலத்தை வெளிச்சமிட்டுக் காட்டும் கண்ணாடி போன்றதாகும். மனிதனின் நாகரீகத்தைத் தலைமுறை தலைமுறையாயக் கடத்தப்படுபவை மக்களின் பண்பாடு. அதிலும் குறிப்பாக நாட்டார் மக்களின் பண்பாடு ஆய்ந்து அறியப்பட வேண்டிய ஒன்று மக்களின் ஆன்மீக நம்பிக்கையுடன் வழிபாட்டின் அங்கமாய் இருப்பவை தெய்வங்கள். விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் அமைந்துள்ள முக்கியக் கோயில்களில் ஒன்று பத்திரகாளியம்மன் கோயில். பல நாட்டுப்புற மக்களின் வழிபாட்டிற்குரியத் தெய்வமாக இருக்கும் இக்கோயிலின் அமைப்பு, வழிபாட்டு முறை, திருவிழாக்கள் ஆகிய அனைத்திலும் பண்பாட்டு எச்சம் காணப்படுகிறது. தாய்தெய்வ வழிபாடு தமிழகத்தில் காணப்பட்ட மிக முக்கிய வழிபாடாகும். அத்தெய்வ வழிபாட்டின் ஆதாரமாயும் பல இனக்குழு மக்களின் அடையாளமாயும் விளங்கும் இக்கோயிலின் பண்பாட்டை ஆய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** சூரசம்ஹாரம்; கழுவேற்ற லீலை; கயர்குத்து திருவிழா

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** க, பொ., & மா, ப. (2026). பண்பாட்டுப் பார்வையில் சிவகாசி பத்திரகாளியம்மன் கோயில். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

தொன்மையும் பழமையும் உடையது தமிழ் மொழி. அம்மொழி பேசும் மக்கள் காலம் காலமாக பல நீண்ட நெடிய பண்பாட்டு வரலாற்றைக்

கொண்டுள்ளனர். பண்பட்ட அமைப்பே பண்பாடாகும். ஒரு இனத்தின் பிரதிபலிப்பு பண்பாடு சார்ந்து அமையும். நாகரீக மக்கள் மாறுபடினும் நாட்டார் மக்களும் அவர்களால் வழிபடப்படும் நாட்டார் தெய்வங்களும் அவர்தம் பண்பாடும் மாறுபடுவதில்லை. மாறாச் சமூகம் கொண்ட நாட்டார் தெய்வங்களின் பண்பாட்டைப் பொருத்திக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்

## பண்பாடு

தமிழகமும் தமிழக மக்களும் ஆழமான வரலாற்றைக் கொண்டவர்கள். அவர்களது மரபும், நாகரீகமும், பண்பாடும் ஒவ்வொரு தலைமுறைக்கும் கடத்தப்பட்டு வருகிறது. நாகரீகத்தின் முதுகெலும்பாய் இருப்பது கிராமங்கள். அக்கிராமங்களின் ஆணிவேராய் நிற்கும் தெய்வங்கள் சார் பண்பாடு பரந்துபட்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. பண்பாடு என்பதற்கு “பண்படு ‘சீர்திருத்து’ என்ற வினை அடியிலிருந்து உருவான சொல்லே பண்பாடு என்று அறியப்பட்ட நிலையில், அது இன்று பண்புவளம், ‘நாகரிகமான தன்மை’, ‘நாகரிகப் படிவம்’ எனப் பல்வேறு பொருளில் ஆளப்பட்டு வருகிறது”1 என்கிறார் முனைவர் இரா.பாலகிருஷ்ணன். மேலும் “பண்பாடு அகவளர்ச்சியையும் நாகரிகம் புறவளர்ச்சியையும் குறிக்கும் என்பதாகும்”2 என்று முனைவர் அ.தட்சிணாமூர்த்தி சுட்டுகிறார். “பண்பாடு என்பது இலக்கியம், கவிதை, நடனம், இசை, கோயில்கள், சடங்குகள், வேத மந்திரங்கள், தொழில்கள் போன்ற சில கூறுகள் மட்டும் ஆகாது. இது மக்களின் நடத்தை முறைகளைக் கட்டுக்கோப்பான நிலையில் செயல்படுத்தும் ஒரு மிகப்பெரும் அமைப்பாகும்”3 என்கிறார் பக்தவத்சல பாரதி. பண்பாடு என்பதற்கு அகவளர்ச்சி என்றும் நாகரிகமான தன்மை, நாகரிகப் படிவம் என அறிஞர்கள் வரையறுக்கின்றனர்.

## கோயில் அமைப்பும் பண்பாட்டுப் பிரதிபலிப்பும்

நாட்டார் தெய்வ வழிபாட்டில் இடம்பெறும் தெய்வங்களின் கோயில்கள் மிகப்பெரிய அளவில் எழுப்பப்படுவதில்லை. பொதுவாக நாட்டார் கோயில்கள் ஆகம விதிப்படி அமைக்கப்பட மாட்டாது. பெரும்பாலான நாட்டுப்புறத்தெய்வங்களின் கோயில் பீடமாக அமைக்கப்பட்டிருக்கும். பீடங்களே கோயில்களாக மக்களால் கருதப்படுப்படுகின்றன. “சில நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு ஆகம விதிப்படி கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. கருவறை, முன்மண்டபம், கொடிக்கம்பம், சுற்றுச்சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன”4 என்கிறார் சு.சக்திவேல்.

பெருந்தெய்வங்களுடன் ஒப்பிடும் வகையில் சிவகாசி பத்திரகாளியம்மன் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கோயில்களைக் கண்டறியும் வகையில் அமைபவை கோபுரங்கள். நாட்டார் தெய்வங்கள் காணலாகும் கோயில்களில் கோபுரங்கள் காணப்படுவதில்லை. ஆனால் சிவகாசி பத்திரகாளியம்மன் கோயில் 18 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு பிறது விரிவாக்கம் செய்யப்பட்டதாகக் கூறுவர். இக்கோயிலின் கோபுரம் திராவிட அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் 110 அடி உயரமும் ஏழு அடுக்குகளும் 7 கலசங்களும் கொண்டு கம்பீரமாக அமைக்கப்பட்டுள்ளது. பழங்காலத்தில் கோயிலின் கோபுரம் கண்டால் அங்கே ஊர் இருப்பது கட்டாயம் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு இக்கோயில் எழுப்பப்பட்டுள்ளது. மற்ற கோயில்களில் காணப்படுவது போல்

கருவறைக்கு நேராக அமைக்கப்படாமல் தனியாகக் கட்டப்பட்டுள்ளது. மேலும் தமிழகக் காளி கோயில்களில் மிகவும் உயரமான ராஜகோபுரம் கொண்ட கோயில் என்ற பெருமைக்கும் உரியது.

## திருச்சுற்றும் பரிவாரத்தெய்வங்களும்

கோயிலுள் இரண்டு மூன்று சுற்றுக்களை நிறைவு செய்த பின்னரேக் கருவறையில் இருக்கும் இறைவனைத் தரிசனம் செய்ய வேண்டும் என்ற பண்பாட்டு மக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது. இத்திருச்சுற்றுக்கள் கோயிலின் அளவுக்கேற்ப அமைக்கப்படும். பொதுவாக கோயில்களுக்கு வரும் பொழுது நேரடியாக ஒரு இறைவனை மட்டும் சந்திப்பதைவிட ஒரே இடத்தில் பல தெய்வங்களை வழிபட்டு அதன் பயனைப் பெறும் வகையில் திருச்சுற்றும் அத்தீருச்சுற்றில் பரிவாரத் தெய்வங்களும் அமைத்தனர். பெருந்தெய்வக் கோயில்களில் அத்தெய்வத்துடன் தொடர்புடையத் தெய்வங்களே பரிவாரத் தெய்வங்களாக வைத்திருப்பர்.

சிவகாசி பத்திரகாளியம்மன் கோயிலின் வெளிச்சுற்றில் பஞ்சமுக கணபதி, லட்சுமி நாராயணர், நாகராஜர், ஐயப்பன், ஆஞ்சநேயர், நவக்கிரகங்கள், காணப்படுகின்றன. இரண்டாம் திருச்சுற்றில் பேச்சியம்மன், கருப்பசாமி, வீரபத்திரர், முருகப்பெருமான், இருளப்பசாமி, பைரவர், விநாயகர், துர்க்கையம்மன், ராக்காச்சியம்மன், ஆகியோரின் சிலைகள் காணப்படுகின்றன. பெருந்தெய்வங்கள் மற்றும் சிறு தெய்வங்களை வழிபட்ட பலன் கிடைக்கவே இவ்வாறு அமைத்துள்ளனர்.

## நந்தவனம்

கோயில்களில் நந்தவனம் காணப்படுவது மரபு. நந்தவனம் என்பவை “பழங்கால சிவன், திருமால், முருகன் கோயில்களில் காணப்படும் ஒரு தோட்டம் ஆகும்”5 என்கிறது விக்கிபீடியா. நந்தவனத்தில் சாதாரண செடி, கொடிகள், மரங்கள் மட்டுமின்றி சில மூலிகைச் செடிகளும் சில தலமரங்களும் நந்தவனத்தில் வளர்க்கப்பட்ட முறைமை காலம் காலமாகப் பின்பற்றப்பட்டுள்ளது. நந்தவனத்ரதைப் பராமரிப்பதற்கென்று தனியே சிலர் நியமிக்கப்பட்டனர்.

சிவகாசி பத்திரகாளியம்மன் கோயிலினுள் ஒரு நந்தவனம் காணப்படுகின்றது. மேலும் இதை தரகன் நந்தவனம் என்றும் அழைக்கின்றனர். இங்கு ஆண்களும் ஆண் குழந்தைகளும் மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட வயது வரை உள்ள பெண் குழந்தைகள் மட்டும் அனுமதிக்கப்படுகின்றனர். பருவ வயது முதல் வயது முதிர்ச்சி அடைந்தப் பெண்கள் வரை அனுமதி கிடையாது. இங்கு எண்ணற்ற செடி, கொடிகள், மரங்கள் மற்றும் மூலிகைகள் காணப்படுகின்றன. சில மூலிகைகளைத் தீட்டுப்பட்ட பெண்கள் தொட்டால் வாடி விடும் என நம்புவதால் பொதுவாக அனைத்துப் பெண்களும் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இங்கு இறுதி வரை நடந்து சென்றால் கடைசிப்பகுதியில் ஒரு கிணறும் மற்றொரு தெய்வமும் காணப்படுகிறது. இத்தெய்வத்தை வணங்கினால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பது மக்களின் நம்பிக்கை ஆகும். மேலும் முந்தைய காலத்தில் ஐந்துதலை நாகம் இருந்ததாகவும் விதிமீறி நடந்து கொள்பவர்களை அது தண்டிக்கும் என்ற நம்பிக்கையும் மக்களிடம் நிலவுகிறது.

## கருவறையும் பண்பாட்டுப்பார்வையும்

பண்பாட்டை மக்களின் அடிப்படை நம்பிக்கையாகக் கருதுகிறோம். நாட்டுப்புற மக்களின் வாழ்வியலில் ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் ஒரு காரணம் உண்டு. இறைவழிபாட்டிலும் பல்வேறு பண்பாட்டு நம்பிக்கைகளை நாட்டார் மக்கள் கொண்டுள்ளனர். தெய்வங்களின் கோயில்களும் உருவச்சிலைகளும் குறிப்பிட்டத் திசையில் அமைய வேண்டும் என்பது நாட்டார் மக்களின் கருத்தாகும். “பெண் தெய்வக் கோயில்கள் பெரும்பான்மை வடக்கு நோக்கியும் சிறுபான்மை கிழக்கு நோக்கியும் ஆண் தெய்வக் கோயில்கள் கிழக்கு நோக்கியும் அமைவதும் மரபாகும்”6 என்கிறார் தொ.பரமசிவன். கோயில்கள் அமைந்திருக்கும் திசையிலேயே பெரும்பாலானக் கருவறைகள் அமைக்கப்படுகின்றன. கருவறைகள் மிகவும் புனிதமான இடமாகக் கருதப்படுகின்றது. உள்ளிருக்கும் தெய்வங்கள் மிகவும் சக்திவாய்ந்த தெய்வங்களாகக் கருதப்படுகின்றன.

சிவகாசி பத்திரகாளியம்மன் கருவறை விமானம் தங்கமுலாம் பூசப்பட்டத் தகடுகளால் பொருத்தப்பட்டவை ஆகும். பொதுவாக வடக்கு நோக்கியே அம்மன் காட்சி தருவர். ஆனால் இக்கோயிலில் கருவறை அம்மன் மேற்கு திசை நோக்கி அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார். எட்டுக் கைகளுடன் சற்று ஆக்ரோசமாகக் காணப்படுகிறார். ஒவ்வொரு கையிலும் சூலம், வாள், அக்கினி, கேடயம் ஆகியவற்றைக் கையில் ஏந்தியுள்ளார். கருவறையில் இருக்கும் மூலவருக்கு சில கோயில்களில் அபிசேகம் காணப்படாது. ஆனால் இந்த அம்மனுக்கு அபிசேகமும் அலங்காரமும் செய்கின்றனர். கருவறையின் முன்பு கொடிமரம், பலிபீடம், சிங்க வாகனம் காணப்படுகிறது.

## பண்பட்ட வழிபாடு

பண்பாட்டின் மிக முக்கியக் கூறு வழிபாடு ஆகும். இனத்திற்கேற்ப, வட்டாரத்திற்கேற்ப, சூழலுக்கேற்ப வழிபாட்டு மரபுகள் மாறுபடும். “ஆதிமனிதன் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தினான். இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டான். இயற்கையை வழிபட ஆரம்பித்தான்”7 என்று இறை வழிபாடு ஆரம்பித்த சூழலை டாக்டர் சு.சக்திவேல் சுட்டுகிறார். பத்திரகாளியம்மனுக்கு வாரத்தில் உள்ள ஏழு நாட்களுமே காலை, மாலை ஆகிய இரு வேளையிலும் அபிசேகம் செய்து பத்தி, சூடம், மாலை, பூ வைத்து வழிபாடு செய்யப்படுகிறது. மேலும் ஒவ்வொரு வாரத்திலும், செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை அன்று பத்திரகாளியம்மனுக்கு சிறப்புப் பூஜைகள் நடத்தப்படுகின்றன. பௌர்ணமி பூஜை, மாதவெள்ளி ஆகிய இரண்டு வழிபாடுகளும் நடைபெறுகிறது. பௌர்ணமியன்று முழுமையும் அம்மனுக்கு வழிபாடு செய்யப்படுகின்றது. இவ்வாறு செய்வதனால் தங்களது குடும்பம் நலமாய் வாழும் என்ற நம்பிக்கையை இவ்வழிபாட்டு முறையில் காணப்படுகிறது. பொதுவான வழிபாடுகள் மட்டுமின்றி சில குறிப்பிட்ட வழிபாடுகள் இக்கோயிலில் மிக முக்கியமானதாய்க் கருதப்படுகிறது.

## ஆடி மாதம்

“ஆடி மாதம் அம்மனுக்கு உகந்த மாதம்” என்ற கருத்து மக்களிடம் காணப்பட்டதால் ஆடி மாதத்தில் அனைத்து அம்மன் கோயில்களிலும்

சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. ஆடி மாதத்தில் எதைத் தொடங்கினாலும் அது சிறப்பாக இரக்கும் என்ற நம்பிக்கையும் மக்கிடம் காணப்படுகிறது. பத்திரகாளியம்மனுக்கு ஆடிமாதம் முழுவதும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. குறிப்பாக ஆடி வெள்ளியன்று சிறப்பு அபிசேகம் மற்றும் அலங்காரம் செய்யப்படுகின்றது. அம்மனுக்கு கூழ் காய்ச்சிப் படையலாக இடுகின்றனர். நாட்டில் நல்லபடியாக மழை பெய்வதற்காகவும் வெப்ப நோய் நீங்கவும் வேண்டி கூழ் சமைத்து அம்மனுக்கு படைத்தபின் அனைவருக்கும் கொடுக்கின்றனர்.

## நவராத்திரி

நவம் என்றால் ஒன்பது என்று பொருள். அதாவது ஒன்பது இரவுகள் என்பதே நவராத்திரி எனப்பட்டது. பெண் தெய்வ வழிபாட்டில் பெண் தெய்வத்தின் வலிமை, வளமை ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையில் நவராத்திரி கொண்டாடப்படுகிறது. நவராத்திரியானது “சக்தியின் பெருமையை உலகுக்கு உணர்த்தவும் வாழ்வில் மகிழ்ச்சி பெறவும் கொண்டாடப்படுகிறது”8 என்கிறார் ஆசிரியர் ரெஜித்குமார். இந்நாளில் கொலு வைப்பது என்ற நிகழ்வு பத்திரகாளியம்மன் கோயிலில் நிகழ்த்தப்படுகின்றது. கொலு பொம்மைகளைக் கொண்டு வந்து படிகளில் வரிசையாக அடுக்குவர். ஒவ்வொரு படியிலும் தேவலோகம், பூலோகம், பாதாளலோகம் என்பதை சுட்டிக்காட்டும் வகையில் பொம்மைகளை அடுக்குவர். தேவலோகத்திற்கு சிவன், பெருமாள், முருகன், பார்வதி உள்ளிட்டப் பல தெய்வங்களையும் அவர்களது திருவிளையாடல்கள், அவதாரங்களை வெளிப்படுத்தும் சிற்பங்களையும் பூலோகத்திற்கு மனிதனின் அனைத்து வாழ்வியல் கூறுகளையும் பாதாளலோகத்திற்கு பாம்பு, பூரான், தேள் போன்ற பூச்சியினங்களையும் வைப்பர். இவற்றிற்கு இடையில் அம்மன் ஒன்பது நாட்களும் ஒன்பது வடிவங்களில் காட்சி தருகிறார். முதல் மூன்று நாட்கள் துர்க்கையாகவும் நடுமூன்று நாட்கள் இலட்சுமியாகவும் இறுதி மூன்று நாட்கள் கலைமகளாகவும் அலங்கரிக்கப்பட்டு வீரம், செல்வம், கல்வியைப் பெறும் நோக்கில் வழிபாடு செய்கின்றனர். பத்தாவது நாள் காளியாக வழிபடுகின்றனர்.

## திருவிழா

உழைத்து சோர்ந்த மக்கள் தன் களைப்பு நீங்கி மகிழ்வதற்கும் பல இடங்களில் பிரிந்து சென்ற அனைவரும் ஒருங்கிணைந்து கொண்டாடும் விழாவே திருவிழா ஆகும். திருவிழாவின் வழி எண்ணற்ற நாட்டார் மக்களின் பண்பாட்டை அறிந்து கொள்ள முடிகிறது.

சிவகாசி பத்திரகாளியம்மன் கோயிலில் சித்திரைத் திருவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சிவகாசி மாரியம்மன் கோயிலில் பங்குனித் திருவிழா கொடிசாட்டி முடிந்தவுடன் இரண்டு வாரங்களுக்குள் பத்திரகாளியம்மன் கோயிலில் கொடிசாட்டித் திருவிழாவைத் தொடங்குகின்றனர். ஆனால் பெரிய நேர்த்திக்கடன்கள் செய்பவர்கள் 48 நாட்களிலிருந்தே விரதம் இருக்கத் தொடங்குகின்றனர். சிறிய அளவிலான நேர்த்திக்கடன்கள் செய்பவர்கள் கொடிசாட்டிய நாளிலிருந்தே விரதம் இருப்பர்.

## கொடி சாட்டுதல்

விழாவின் அடையாளமே கொடிசாட்டுதல் ஆகும். பத்திரகாளியம்மனின் கோட்டுருவம் பொறிக்கப்பட்டக் கொடியுடன், ஒரு மஞ்சள் துணியில் வேப்பிலை, எலுமிச்சம்பழம் மற்றும் பூ வைத்து அதனைக் கொடிமரத்தில் ஏற்றுவர். அதனொடு தர்ப்பைப்புல் வைத்து கட்டுவர். மாரியம்மன் கோயிலில் ஞாயிற்றுக்கிழமையும் பத்திரகாளியம்மன் கோயிலில் செவ்வாய்க்கிழமையும் கொடிசாட்டுவர். கொடிசாட்டிவிட்டால் அன்று முதல் ஊரைவிட்டு செல்லக் கூடாது என்ற மரபு மக்களிடையே பின்பற்றப்படுகிறது.

மேலும் நேர்த்திக்கடன்கள் செய்ய ஒப்புக்கொண்டால் குறிப்பிட்டக் காலகட்டத்தில் இறைச்சி, கீரை, எண்ணெய் சேர்த்த உணவுகள் ஆகியவற்றை சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். வீட்டில் உணவுகளைத் தாளிப்பது பாவமாகக் கருதப்படுகிறது. பிற வீடுகளில் உணவு உண்பதோ தண்ணீர் அருந்துவதோ கூடாது என்பர்.

## பத்திரகாளியம்மன் கோயில் திருவிழா

மக்களை வருடத்தில் சில நாட்கள் ஒருங்கிணைக்கும் தன்மை உடையவையாகத் திருவிழாக்கள் திகழ்கின்றன. சிவகாசி பத்திரகாளியம்மன் கோயிலில் 10 நாட்கள் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. கொடிசாட்டும் நாளே திருவிழாவின் முதல் நாளாகக் கருதப்படுகிறது. கடைக்கோவில் எனும் இடத்திலிருந்து அம்மன் வெள்ளி சிங்க வாகனத்தில் கிளம்பி மாலை வேளையில் கோயிலுக்கு வந்ததும் கொடியேற்றப்படுகிறது. பிறகு இரவில் நகர்வலம் வரும் பொழுது வானவேடிக்கைகள் வெடித்து அம்மனை வரவேற்பர். இரண்டாம் நாளில் தங்க ஊஞ்சலில் அமர்ந்து பின் காமதேனு வாகனத்தில் ஊரை சுற்றி வலம் வந்து கோயிலுக்குள் கொண்டு வருவர். மூன்றாம் நாள் கைலாச பர்வத வாகனத்திலும் நான்காம் நாள் வேதாள வாகனத்திலும் அம்மனை வலம் வரச் செய்வர்.

## சூரசம்ஹாரம்

ஐந்தாம் நாளிலிருந்து திருவிழா சற்று சிறப்பாகக் கொண்டாடப்படும். ஐந்தாம் நாள் அதிகாலை 3.00 மணியிலிருந்து சூரசம்ஹாரம் நிகழ்வு நடைபெறும். சூரனை அம்மன் வதம் செய்யும் நிகழ்வை நினைவூட்டும் விதமாக இந்நிகழ்வு நிகழ்த்தப்படுகிறது. சூரன் போன்று வடிவமைக்கப்பட்ட வைக்கோல் பொம்மை போல் உருவாக்கப்பட்ட அரக்கனுக்கு ஒவ்வொரு முச்சந்தியிலும் அரக்கனின் முகத்தை மாற்றுவர். அரக்கன் முகம் பொருத்தப்பட்ட உருவ பொம்மையை ஏந்தியவர்கள் அரக்கன் அம்மனுடன் சண்டை போடுவது போல் முன்னும் பின்னும் சுற்றி வருவர். பிறகு அம்மனின் சூலம் குற்றியதும் வேறு அரக்கனின் முகத்தை மாற்றிவிடுவர். இவ்வாறு மூன்று இடங்களில் மாற்றி இறுதியாக சூரனின் முகத்தை மாற்றுவர். முருகன் கோயில் முன்பு அம்மனுக்கும் அரக்கனுக்கும் இடையில் பயங்கர சண்டை நடக்கும். இறுதியில் அம்மனின் சூலம் குத்தியதும் அரக்கனின் வயிற்றில் இருக்கும் குடல் போன்ற அமைப்பை உருவி அம்மனின் முன்பு வைத்து எரித்துவிடுவர். சம்ஹாரம் முடிந்ததும் அம்மனை கோயிலுக்குக் கொண்டு போய்விடுவர்.

### கழுவேற்ற லீலை

ஆறாம் நாள் திருவிழா சற்று முக்கியமானத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. ஆறாம் நாள் அன்று நவதானிய வர்த்தகர்களால் பிரம்மாண்டமாக உருவாக்கப்பட்ட மண்டபத்தில் அம்மன் தங்கத்தாமரையில் வீற்றிருப்பாள். மாலை 5 மணி முதலே மக்கள் அம்மனை வழிபட ஆரம்பித்துவிடுவர். இரவு 10 மணிக்கு மேல் அம்மன் வெள்ளி ரிசப வாகனத்தில் உலா வந்து அதிகாலை 5 மணிக்கு மாரியம்மன் கோயிலுக்கு அழைத்து வரப்படுவார். அங்கு கழுவேற்ற லீலை என்ற நிகழ்வு நடைபெறும். கள்வர்களை ஊரிலிருந்து விரட்டி அம்மன் கழுவேற்றியதை நினைவுகூறும் வகையில் சிலர் கள்வர் போல் வேடமிட்டு அவ்விடத்தில் அமைக்கப்பட்ட கழுமரத்தில் விழுந்து இறப்பது போல் நடிப்பர். பிறகு அம்மன் கோயிலுக்கு சென்றுவிடுவார்.

ஏழாம் நாள் திருவிழாவில் அம்மன் சயன கோலத்தில் பூப்பல்லக்கில் ஊர்வலம் வருவார். இத்திருவிழாவை கொத்தமார்கள் மகமைப் பண்டு என்ற குழுவினர் நடத்துவர். அம்மன் ஊர்வலம் வரும் பொழுது திருமணம் முடித்த பெண் புகுந்த வீட்டிற்குக் கொண்டு செல்லும் சீர்வரிசைகளை எடுத்து செல்வர். அம்மன் ஊரை வலம் வந்து கோயிலுக்குள் சென்றதும் சீர் வரிசைகளைக் கோயிலில் ஒப்படைத்துவிடுவர்.

### அம்மன் வேட்டைக்கு செல்லுதல்

எட்டாம் நாள் திருவிழா பொங்கல் திருவிழா எனப்படும். இத்திருவிமாவில் மாலை 5 மணிக்கு அம்மன் குதிரை வாகனத்தில் வேட்டைக்கு செல்லுவாள் என்று கூறி கோபம் கொண்ட பாந்து செல்லும் தன்மை உடைய குதிரையின் மேல் அம்மனை வைத்து ஊர்வலமாக வருவர். அவர்களுடன் ஆடு ஒன்றையும் மக்கள் அழைத்து செல்லுவர். முப்பிடாதி அம்மன் கோயிலின் அருகில் வைத்து ஆட்டை வெட்டிப் பலி இடுவர். அம்மன் வேட்டைக்கு சென்று வருவதை நினைவூட்டும் வகையில் இந்நிகழ்வு நிகழ்த்தப்படுகின்றது. அம்மனை அமைதிப்படுத்திய பின்பு இரவு 9 மணிக்கு சிம்ம வாகனத்தில் அம்மனை ஊரைச் சுற்றி அழைத்துவருகின்றனர்.

### கயர்குத்து திருவிழா

ஒன்பதாம் நாள் திருவிழாவே கயர்குத்து திருவிழா எனப்படும். இந்த நாளில் மக்கள் தங்கள் வேண்டுதல்களை பெரும்பான்மையாக நிறைவேற்றுவர். அதிகாலை முதலே தங்கள் உடலில் பல வண்ண நிறங்களைப் பயன்படுத்தி கரும்புள்ளி செம்புள்ளி குத்தி வேப்பிலையுடன்,

> ‘ஆகோய் ஐயாகோய்
> ஆத்தாத்தா காளியாத்தா”

என்ற கோசங்களை எழுப்பிக் கொண்டே கோயிலுக்கு செல்லுவர். அங்கு வேப்பிலை கொண்டு செய்யப்பட்ட படுக்கையில் கொண்டு வந்த வேப்பிலைகளை போட்டு உருண்டு கொடுப்பர். பின்பு கோயிலுக்குள் சென்று அம்மனை தரிசிப்பர். திருவிழாவின் பொழுது மாமிசம் உண்ணும் பழக்கம் மக்களிடம் கிடையாது. ஆனால் ஒன்பதாம் திருவிழாவின் பொழுது கோயிலுக்கு சென்று வந்ததும் மாமிசம் எடுத்து சமைத்து உண்பர். மாலை வேளையில் அம்மன் கடைக்கோவிலிருந்து பூப்பல்லக்கில் எழுந்தருளுவார். கோயிலுக்குள் நுழைந்து திருச்சுற்றை நிறைவு செய்து அங்கிருக்கும் மண்

திடலில் அம்மனின் பல்லக்கை நிறுத்துவர். பிறகு பல வானவேடிக்கைகளை நிகழ்த்துவர். அம்மன் வானவேடிக்கையைப் பார்த்து ஊரைச் சுற்றி வலம் வருவார். பிறகு கோயிலுக்கு சென்றுவிடுவார். ஒன்பதாம் திருவிழாவில் பறவைக்காவடி எடுக்கும் பாரம்பரிய முறையும் காணப்படுகிறது.

## தேர்த்திருவிழா

பத்தாம் நாளில் தேர்த்திருவிழா நிகழ்த்தப் பெறுகின்றது. காலை 9 மணிக்குப் பெரிய தேரிலும் சிறிய தேரிலும் வடம் பூட்டப்படுகின்றது. மாலை 4 மணிக்கு அம்மனின் பெரிய தேரை மக்கள் அனைவரும் சேர்ந்து இழுக்கின்றனர். முதலில் சிறிய தேரை சுற்றி வரச் செய்து எல்லையில் நிறுத்துவர். பெரிய தேர் இழுக்க இரண்டு நாள் எடுக்கும். தேர் இழுக்கும் முன்பு சேவலைக் காவு கொடுப்பது போல் தேர் இழுத்து முடிந்ததும் தேங்காயை சிதறுகாயாக வீசி எறிகின்றனர். தேர் தடம் பார்த்ததும் அம்மன் மஞ்சள் நீராடி அன்ன வாகனத்தில் கோயிலுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றாள்.

தேர் எல்லை வந்த மறுநாள் 11 ஆம் திருவிழாவாகவும் கடைசித் திருவிழாவாகவும் கொண்டாடப்படுகின்றது. கடைசித் திருவிழா அன்று மாரியம்மனும் பத்திரகாளியம்மனும் கோயிலில் தங்க ஊஞ்சலில் இருந்துவிட்டு மாலை இருவரையும் வெள்ளி ரிசப வாகனத்தில் அழைத்து வருகின்றனர். கடைசித் திருவிழாவிற்கு மறுநாள் அம்மனைத் தெப்பத்தில் உள்ள தேரில் வைத்து தெப்போற்சவ விழா எடுத்துத் திருவிழாவை நிறைவு செய்கின்றனர். 11 நாட்களும் எடுக்கும் திருவிழாக்கள் பல தரப்பட்ட இனக்குழுமக்களால் காலம் காலமாக நிகழ்த்தப் பெறுகின்றது.

## நேர்த்திக்கடன்கள்

பத்திரகாளியம்மன் கோயிலில் நிகழ்த்தப்படும் நேர்த்திக்கடன்கள் பல. இவை மக்களின் பண்பாட்டை அவர்களின் சூழலோடு எடுத்துரைப்பதாய் அமைந்துள்ளது.

பொங்கல் வைத்தல்
முடி காணிக்கை
தீச்சட்டி எடுத்தல்
உருண்டுக் கொடுத்தல்
பால்குடம் எடுத்தல்
மாவிளக்கு எடுத்தல்
உருவம் கொண்டு வருதல்
காணிக்கைக் கொடுத்தல்
பறவைக்காவடி எடுத்தல்
ஆயிரம் கண் பானை எடுத்தல்

ஆகியவை ஆகும்.

### 1. பொங்கல் வைத்தலும் முடிக்காணிக்கை கொடுத்தலும்

சித்திரைத் திருவிழாவின் பொழுது அதிக மக்கள் பத்திரகாளியம்மனின் கோயிலின் முன்பிருக்கும் பொங்கல் மண்டபத்தில் பொங்கல் வைப்பர். பக்தர்கள் தங்கள் மனதில் வீடுகட்டுதல், திருமணம், நீண்ட நாள் பிணி நீங்க அம்மனிடம் வேண்டிக் கொள்வார்கள். பிறகு வேண்டியது நிறைவேறியதும் அம்மனுக்குப் பொங்கல் வைத்து

அம்மனுக்குப் படையல் வைப்பர். முடிக்காணிக்கைக் கொடுத்த பிறகும் பொங்கல் வைப்பதுண்டு. இனிப்பான உணவை அம்மனுக்குப் படைப்பது மரபார்ந்த பண்பாடாகும். எனவே பொங்கலை அம்மனுக்கு உணவாய்ப் படைக்கின்றனர்.

மனிதன் தன் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளையும் மிகப் பெரிதாகக் கருதினான். எனவே இறைவனுக்கு முடி காணிக்கை செலுத்துகின்றனர். பொதுவாக ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் இவ்வகை நேர்த்திக்கடனைச் செலுத்துகின்றனர். இப்பகுதியில் இருக்கும் மக்கள் குழந்தை பிறந்தவுடனும் திருவிழாக் காலங்களிலும் இக்கோயிலுக்கு வந்து தம் முடியினைக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

இக்கோயிலோடு தொடர்புடைய மக்கள் எந்த ஊரில் இருந்தாலும் முடிக்காணிக்கைக் கொடுக்க வந்துவிடுகின்றனர். நேர்த்திக்கடன் போட்ட நாளில் இருந்து முடிக் காணிக்கைச் செலுத்தும் வரை தலை முடியை வெட்டக்கூடாது என்பது மக்களின் நம்பிக்கையாகக் கருதப்படுகிறது.

### 2. தீச்சட்டி எடுத்தல்

தீச்சட்டி எடுத்தல் என்பது மண்பாத்திரம் ஒன்றில் நெருப்பை வார்க்கின்றனர். அவ்வாறு வார்க்கப்பட்ட தீச்சட்டியை விரதமிருந்தவர்கள் எடுத்துக்கொண்டு பத்திரகாளியம்மன் கோயிலுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்வர். குடும்பத்திலுள்ளோருக்கு அம்மை, காய்ச்சல், காலரா போன்ற நோய்களில் இருந்து குணமடைய வேண்டும் என்றப் பல காரணங்களுக்காகத் தீச்சட்டியை எடுக்கின்றனர். கொடி சாட்டியதிலிருந்து பூச்சட்டி எடுக்க ஆரம்பித்து விடுவர். தீச்சட்டி எடுத்த பிறகு மக்கள் தங்களுடன் வந்தவர்களுக்கு மாமிச உணவை சமைத்துப் பரிமாறுவர். நேர்த்திக்கடனாக தீச்சட்டியை எடுப்பர்.

தீச்சட்டியை ஒரு கை மற்றும் இரு கைகளிலும் ஏந்தி வழிபாடு நிகழ்த்துவர். 21 சட்டியை ஏந்துவதும் அதைப் பார்ப்பதும் மக்கள் தங்கள் வாழ்வு மேம்படக் காரணமாக அமையும் என்று நம்புகின்றனர்.

### 3. உருவம் கொண்டு வருதல்

உருவம் கொண்டு வருதல் என்ற நேர்த்திக்கடன் பத்திரகாளியம்மன் கோயிலில் செய்யப்படுகிறது. கால்வலி, கைவலி போன்ற நோய்களுக்கும் குடும்ப உறவுகளில் துன்பம் நேரும் போது இந்நேர்த்திக்கடன் செய்வதாக இறைவனிடம் வேண்டுவர். கால்வலிக்கு கால் உருவ பொம்மையும் கை வலிக்கு கை உருவ பொம்மையும் குழந்தை வரம் வேண்டி குழந்தை உருவ பொம்மையும் திருமணம் நடைபெற ஆண் பெண் உருவ பொம்மையும் சொந்த வீடுகட்ட வீடு பொம்மையும் வாங்கி வைப்பர். வாங்கிய பொம்மையை கோயிலில் அடுக்கி வைத்து வழிபாடு செய்வர். இவ்வாறு செய்வதால் தமது வேண்டுதல் நிறைவேறும் என்று நம்புகின்றனர்.

### 4. பறவைக்காவடி எடுத்தல்

பறவைக்காவடி என்பது பக்தர்கள் தங்கள் உடலில் கம்பிகளைக் கொண்டு அலகு குத்துகின்றனர். பிறகு உயரமான இயந்திரத்தில் காவடி போன்ற அமைப்பை உருவாக்கிப் பெரிய இயந்திரத்தில் தொங்குவர். ஒவ்வொரு முக்கியமான இடம் வரும்பொழுது மேலிருந்து கீழாகப் பறந்து

வருவதைக் காணமுடிகின்றது. அவ்வாறு வரும் பொழுது மக்கள் தங்கள் கைக்குழந்தைகளைக் கொடுத்து வாங்குவர். குழந்தைகளை அவர்களின் கையில் கொடுத்து வாங்குவதால் குழந்தைகள் நலமாக வாழ்வர் என்ற நம்பிக்கை மக்களிடம் காணப்படுகின்றது.

## முடிவுரை

பண்பாடு என்பது காலம் காலமாய்க் கடத்தப்படும் மரபு சார்ந்த செயல்பாடாகும். நாட்டார் தெய்வ வழிபாட்டில் எண்ணற்றப் பண்பாட்டுக் கூறுகள் காணப்படுகின்றன. கோபுரம் அமைத்தல், திருச்சுற்று மற்றும் பிரகாரத் தெய்வங்களை நிறுவியதிலும், நந்தவனம் அமைத்ததிலும் பழங்கால மக்களின் மரபு சார்ந்த நம்பிக்கை காணப்படுகின்றது. இறை வழிபாட்டில் முக்கிய வழிபாட்டு முறையாக ஆடி வெள்ளி, பௌர்ணமி நாட்களிலும் நவராத்திரி போன்ற முக்கிய நாட்களிலும் அம்மனுக்கு வழிபாடுகள் செய்வதால் பழங்கால மக்களின் நாகரீகம் மற்றும் பண்பாடு புகத்தப்படுகின்றது. 10 நாள் திருவிழாவிலும் பல இனக்குழு மக்கள் திருவிழாவை எடுத்தும், திருவிழாவில் பங்கெடுக்கும் பணியையும் காலம் காலமாhய் மேற்கொண்டு வருகின்றனர். நேர்த்திக்கடன்கள் செய்வது மக்களின் நம்பிக்கை வெளிப்பாடாய் இருப்பது உள்ளிட்டப் பல கருத்துக்கள் இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. பாலகிருஷ்ணன்.இரா முனைவர், தமிழ் மொழி சமுதாயம் பண்பாடு, ப.6
2. தட்சிணாமூர்த்தி.அ முனைவர், தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.2
3. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.154
4. சக்திவேல்.சு டாக்டர், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.230
5. https://ta.wikipedia.org/wiki/%E0%AE%A8%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B5%E0%AE%A9%E0%AE%AE%E0%AF%8D
6. சண்முகானந்தம்.ஏ, தென்புலத்து மன்பதை பேராசிரியர் தொ.பரமசிவன், ப.302
7. சக்திவேல்.சு டாக்டர், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப223
8. ரெஜித்குமார்.த டாக்டர், நாட்டுப்புற இயல், ப.164

## துணைநூற் பட்டியல் (References)


1. சக்திவேல்.சு டாக்டர், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், 8/7 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 600108, மறுபதிப்பு சனவரி, 2001.
2. சண்முகானந்தம்.ஏ, தென்புலத்து மன்பதை பேராசிரியர் தொ.பரமசிவன், உயிர் பதிப்பகம், 4, 5 ஆவது தெரு, சக்தி கணபதி நகர், திருவொற்றியூர், சென்னை 600 019, இரண்டாம் பதிப்பு, நவம்பர் 2023.
3. தட்சிணாமூர்த்தி.அ முனைவர், தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப் பதிப்பகம், AP 1108, தென்றல் காலனி, மூன்றாவது தெரு, மேற்கு அண்ணா நகர், சென்னை 600 040, திருத்திய மறுபதிப்பு ஏப்ரல் 2021.
4. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் 608001, விரிவாக்கப்பெற்ற திருத்திய பதிப்பு : ஏப்தல் 2003
5. பாலகிருஷ்ணன்.இரா முனைவர், தமிழ் மொழி சமுதாயம் பண்பாடு, சபாநாயகம் பதிப்பகம், 176, கீழரத வீதி, சிதம்பரம் 608 001, முதற்பதிப்பு டிசம்பர் 2013.
6. ரெஜித்குமார்.த டாக்டர், நாட்டுப்புற இயல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர் 600 050, மூன்றாம் பதிப்பு டிசம்பர் 2020.

© 2026 பொற்கொடி க, பத்மபிரியா மா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..